17.10.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.170 /2019 ) திரு.எஸ்.முருகேசன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் கோவில்பட்டி ராஜுவ் நகரில் குடியிருக்கிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ.எக்னாமிக்ஸ் படித்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் சிவநாராயணசாமி ரெட்டியார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் முதல் மனைவி பெயர் சீதாலட்சுமியம்மாள் என்றால் சரிதான். முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் தான் செல்வதுரைச்சியம்மாள், வாதி துரைராஜ் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் என்னவென்றால் ராஜாத்தியம்மாள். சீதாலட்மியம்மாள் உயிருடன் இருக்கும் போதே 2 வது திருமணம் ராஜாத்தியம்மாளை செய்துள்ளார் என்றால் ஆமாம் இந்து முறைப்படி செய்து கொண்டார். சீதாலட்சுமியம்மாளை விவகாரத்து எதுவும் செய்யாமல் ராஜாத்தியம்மாளை திருமணம் செய்துகொண்டார் என்றால் ஆமாம் பெற்றோர்கள் சம்மதத்துடன் செய்துகொண்டார். ராஜாத்தியம்மாளை திருமணம் செய்யும் போது சீதாலட்சுமியம்மாளின் திருமணம் நடைமுறையில் தான் இருந்தது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஆவண எண்.4581/2012 என்ற வாரிசு சான்று ஆவணத்தினை கோவில்பட்டி கோட்டாட்சியர் ரத்து செய்த ஆவணம் என்றால் சரிதான். 4581/2012 என்ற ஆவணத்திற்கு நான் தான் மனு செய்தேன் என்றால் ஆமாம். நான் மனு செய்ததன் பேரில் வாதி, எனது பெயர்,ஜெயக்குமார் 3 பேர்கள் பெயர்களை சேர்த்து வாரிசு சான்று வழங்கினார்கள் என்றால் ஆமாம். என்னிடம் தற்போது காட்டப்படும் வாரிசு சான்றிதழ் தானா என்றால் ஆமாம். குறியீடு செய்ய வாதி தரப்பில் அவர்கள் தரப்பு ஜெராக்ஸ் ஆவணத்தை குறியீடு செய்ய கோரப்பட்டது ஜெராக்ஸ் ஆவணமாக இருப்பதால் இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஆவணமாக குறியீடு செய்ய நீதிமன்றம் இயலாது என்று கூறப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை. வாரிசு சான்றிதழ் அசல் ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றம் உத்தரவிட்டால் நான் தாக்கல் செய்ய முடியும் என்றால் தாக்கல் செய்யலாம்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,

**கோவில்பட்டி**,
17.10.2025.